மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து நூற்றுக்கு நூறு ஏற்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். ஏனென்றால், அவர்கள் தெரிவித்ததைப்போல் ஒவ்வொரு பத்திரிகையின் சார்பாக கருத்துக்களை எழுதுபவர்கள், தொகுத்தளிப்பவர்கள் அந்தக் கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் அதைச் செய்வார்கள் என்று குற்றஞ்சாட்ட நான் விரும்பாவிட்டாலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப்போல் அந்த உணர்வுகள் அவர்களை நிச்சயமாக ஈர்க்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆகவே, டெலிவிஷன் நிலையத்தாரோ அல்லது வானொலி நிலையத்தாரோ இப்படிப்பட்ட சபை நடக்கிறபோது பார்ட் டைம் ஜாப்பாக சில பேர்களை அவர்கள் நியமித்து—இங்கே இருப்பதாக எனக்குச் சொன்னார்கள், எந்த அளவிற்கு அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை—அப்படி நியமிப்பார்களேயானால் பாரபட்சமின்றி, காழ்ப்புணர்ச்சியின்றி, காய்தல் உவத்தல் இன்றி (குறுக்கீடு)—இருட்டடிப்பு என்று நான் சொல்ல விரும்பவில்லை, அது நீங்களாகப் பார்த்துப் பயன் படுத்த வேண்டிய வார்த்தை—செய்திகளைத் தருவார்கள். தயவுசெய்து தாங்கள் அந்தச் செய்தியை வானொலி நிலையத்தாருக்கும் மற்றவர்களுக்கும் சொல்லி ஏற்பாடு செய்வீர்களானால் மெத்தவும் நலமாகயிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும் சொன்ன அந்தக் கருத்துக்களை முழுமையாக நானும் ஏற்று—ஏற்கனவே அவர்களுக்கு இடம் ஒதுக்கியிருக்கிறோம், வானொலி நிலையத்தாருக்கு என்று நிருபர்கள் இருக்கிற இடத்தில் நாங்கள் ஒதுக்கியிருந்தும் அவர்கள் அனுப்பவில்லை; ஆனால், மேற்கொண்டு அவர்கள் அனுப்பியாக வேண்டும் என்று உங்கள் மேலான கருத்துக்களை நான் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.10)

(ஆ) போலீஸ் கமிஷனரின் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 7—11—1979 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சென்னை நகர போலீஸ் கமிஷனர் அவர்கள்மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார்கள். பேரவை நடந்துகொண்டிருக்கும்போது மதுவிலக்கு சம்பந்தமான அரசின் கொள்கை குறித்த ஒரு அறிவிப்பை போலீஸ் கமிஷனர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தார் என்றும், அது "அலை ஓசை" பத்திரிகையில் வந்துள்ளது என்றும் எனவே போலீஸ் கமிஷனரின் இச் செய்கை அவை உரிமை மீறல் ஆகும் என்றும் திரு. ரகுமான்கான் குறிப்பிட்டார்.

1979 நவம்பர் 9] (பேரவைத் தலைவர்)

இப்பிரச்சனை குறித்து அரசின் தரப்பில் கருத்து தெரிவிக்க மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், போலீஸ் கமிஷனர் தாம் அவ்வாறு பத்திரிகை நிருபர்களுக்கு எந்த அறிக்கையும் அளிக்கவில்லை என்று கடிதம் எழுதி யிருப்பதைத் தெரிவித்து, "அலை ஓசை" தவிர வேறு எந்தப் பத்திரிகையிலும் இந்தச் செய்தி வெளிவரவில்லை என்பதையும் குறிப்பிட்டு, தவறாக வெளி யிடப்பட்ட தகவலின்பேரில் தரப்பட்ட உரிமை மீறல் பிரச்சனை ஆகும் இது என்றும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் குறிப்பிட்டதிலிருந்தும், வேறு எந்தப் பத்திரிகைகளிலும் இச் செய்தி வராததிலிருந்தும், தாம் அவ்வாறு அறிக்கை வெளியிடவில்லை என்று போலீஸ் கமிஷனர் தெரிவித்துள்ளதாலும், அரசின் கொள்கை எதுவும், பேரவை நடந்துகொண்டிருக்கும்போது பேரவைக்கு வெளியே அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. இந்தச் சந்தர்ப் பத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரவையில் ஒரு உரிமை பிரச்சனையை எழுப்புவதற்குமுன், தன்னிடமுள்ள தகவல் சரியானதுதானா என்பதைக் கூடியவரை உறுதி செய்துகொள்வது அவசியம். ஒரே ஒரு பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியை மட்டும் வைத்துக்கொண்டு பிரச்சனையைக் கொண்டுவராமல் அதுபற்றித் தகவல் அறிந்துகொண்டு வருவது நல்ல மரபாகும்.

எனவே, இப்போது எழுப்பப்பட்ட பிரச்சனையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பின் மீது நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. இங்கு 'அலை ஓசை' பத்திரிகையில் மட்டும் தான் வந்தது, அது தான் கவனத்திற்கு வந்தது என்று குறிப்பிட்டார்கள். 'மாலை முரசு' பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஆகவே இந்த இரண்டு பத்திரிகையிலும் வந்திருக்கிறது என்பதை நீங்கள் தீர்ப்பில் குறிப்பிடுவது தான் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிதாக ஒரு பிரச்னையை இப்போது கொண்டு வராதீர்கள், 'மாலை முரசு' பத்திரிகையில் வந்துள்ளது என்பதை என் கவனத்திற்கு யாரும் கொண்டு வரவில்லை.

திரு. க. சுப்பு : 'மாலை முரசிலும்' வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திரு. சுப்பு அவர்கள் விஷயத்தை குழப்பக் கூடாது. நான் அன்றைக்கு வந்த பல பத்திரிகைகளையும் பார்த்தேன், முரசொலி உட்பட. தயவு செய்து கவனிக்க வேண்டுகிறேன்.

'முரசொலி' உட்பட, அந்தச் செய்தி வரவில்லை. 'மாலை முரசிலும்' வந்திருந்தது என்பதை சேர்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கமிஷனரிடம் வந்த அறிக்கையின் அடிப்படையில் தாங்கள் முடிவு எடுத்தாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது எதையும் தயவுசெய்து எழுப்பவேண்டாம், தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அரிய ஒரு யோசனையை கூறினார்கள். அதனால் அவர்கள் என்னுடைய திர்ப்புக்குப் பிறகு அவர்கள் பேசினார்கள். என்னுடைய திர்ப்புக்குப் பிறகு யாருக்கும் பேசுவதற்கு அனுமதி கிடையாது.

(இ) தொலைக்காட்சி நிலையத்தின் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் 7—11—1979 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் "தொலைக் காட்சி" (டெலிவிஷன்) இயக்குநர்மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். இப் பிரச்சனை குறித்த எனது தீர்ப்பு பின்னர் வழங்கப் படும் என்று தெரிவித்து இருந்தேன். இப்போது அத் தீர்ப்பை அளிக்கிறேன்.

3—11—1979 அன்று பேரவையில் அரசின் ஒரு கொள்கையை நிராகரிக்கும் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தில் கூறப்பட்ட சில குற்றச்சாட்டுகள் குறித்து "தொலைக் காட்சி" தமிழ் செய்தி அறிவிப்பில் முழுவதும் வெளியிட வில்லை என்றும், ஆங்கிலச் செய்தி அறிவிப்பில் இப் பொருள் குறித்து எதுவுமே குறிப்பிடவில்லை என்றும் எனவே இது அவை உரிமை மீறல் ஆகும் என்று திரு. ரகுமான்கான் குறிப்பிட்டார். இப் பிரச்சனை குறித்துத் தொலைக் காட்சி இயக்குநர் அளித்துள்ள விளக்கத்தைப் பேரவைக்கு நான் படிக்கிறேன் . . .

" I am furnishing herewith a copy each of the news bulletins in Tamil and English as telecast on 3rd November 1979.

Doordarshan Kendra, Madras, puts out to news bulletins every day, one in Tamil at 8-00 p.m. and another in English at 9-45 p.m. for a duration of 15 minutes each. The Tamil news bulletin is more local and regional in character whereas the English news bulletin is more national and international.

Film and other visual coverage place a considerable restraint on the actual length of various news stories in Television.

We do not have any assembly reviews from Doordarshan Madras. . .